# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Visva | Father/Husband Name | : Thangamuniyandi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 08.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை திருமோகூரில் வசிக்கிறேன். லேத்தில் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 25.07.20ம் தேதி மாலை சுமார் 07.30 மணியளவில் திருமோகூரிலுள்ள டீ கடை அருகே வைத்து போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும், பாலமுருகன் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் கையெழுத்து செய்ததில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரிதான். எதற்காக எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஒரு வழக்கறிஞர் வீட்டில் செயின் திருடுபோயிருந்தது சம்மந்தமாக எழுதினார்கள். எந்த வழக்கறிஞர் வீட்டில் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீடு எங்குள்ளது என்ற விவரமும் தெரியாது என்றால் வீடு தெரியும், வழக்கறிஞர் வீடு என்று தெரியாது. எந்த வழக்கு என்று எனக்கு தெரியாது என்றால் திருட்டு வழக்கு. காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் ஒன்றும் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை. என்னுடன் கையெழுத்து செய்தவர் என் நண்பர் என்றால் சரிதான். என் நண்பர் கையெழுத்து செய்கிறாரே போலீசார் கேட்டதன்பேரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.